# DEPOSITION OF WITNESS.

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, KARUR

## Spl.S.C. No.21/2023

## PROSECUTION WITNESS No - 31

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **சிதம்பரபாரதி** | **Caste** | : | |
| **Father/ Husband Name** | : | | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of January 2026.**

**(7ம் எதிரி மணிகண்டன் (எ) கூல்மணி ஆஜர்படுத்தப்பட்டார்கள் மற்றும் 9ம் எதிரி உதயநிதி (எ) சூர்யா இன்று ஆஜராகில்லை, அவர் 317ன் கீழ் மனு தாக்கல் செய்து நிபந்தனையுடன் அனுமதிக்கப்பட்டது. நிபந்தனை அடையாளத்தை பற்றி ஆட்சேபனை தெரிவிக்கப்படாத**

**முதல் விசாரணை :**

நான் தற்போது சென்னை அண்ணு நகர் மாவட்டத்தில் வி.7. நொலம்பூர் காவல் நிலையத்தில் சட்ட ஒழுங்கு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 17.12.2020 ஆம் தேதியன்று வேலாயுதம்பாளையம் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்தபோது வேலாயுதம்பாளையம் காவல் நிலைய குற்ற எண்.778/2020 சட்டப்பிரிவு 147, 148, 302 இ.த.ச. வழக்குக்கோப்பினை உதவி ஆய்வாளர் அருள்செல்வன் என்பவரிடம் இருந்து பெற்றுக்கொண்டு என் புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். சம்பவயிடமான மூலிமங்கம் பிரிவு 99 காப்பி காபே என்ற இடத்திற்கு இரவு 10.30 மணிக்கு சென்று பார்த்தபோது சாட்சிகள்

இல்லாதவாறும், சம்பவயிடம் இருட்டாக இருந்ததாலும், சம்பவயிடத்தை பார்வையிட்டு பின்னர் பார்வையிட முடியாததால் திரும்பினேன். பின்னர், 18.12.2020 ஆம் தேதியன்று காலை 6 மணியளவிற்கு சம்பவயிடத்திற்கு சென்று அங்கிருந்த சாட்சிகள் விஜய்ஆனந்த், தனலட்சுமி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் ஏற்கனவே அ.த.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த மாதிரி வரைபடம் இதுதான், அது அ.த.சா.ஆ.52 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்தில் இரத்தம் படிந்த மண், இரத்தம் படியாத மண், TN–45–DV–5151 என்ற பல்சர் இருசக்கர வாகனம் இரத்தக்கறை படிந்த Woodland என எழுதியிருந்த கருப்புகலர் செருப்பு ஒரு ஜோடி, VKC pride செருப்பு ஒரு ஜோடி, அருந்த நிலையில் கிடந்த தங்கசெயின் ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே, அ.த.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே இரத்தம் படிந்த மண் சா.பொ.4 ஆகவும், இரத்தம் படியாத மண் சா.பொ.5 ஆகவும், TN–45–DV–5151 என்ற பல்சர் இருசக்கர வாகனம் ஏற்கனவே சா.பொ.9 ஆகவும், இரத்தக்கறை படிந்த Woodland என எழுதியிருந்த கருப்புகலர் செருப்பு ஒரு ஜோடி ஏற்கனவே சா.பொ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. VKC pride செருப்பு ஒரு ஜோடி சா.பொ.7 ஆகவும், அருந்த நிலையில் கிடந்த தங்கசெயின் ஏற்கனவே, சா.பொ.8 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் சம்பவயிடத்து சாட்சிகள், ரமேஷ், ராமர், சிவக்குமார், விஜய்ஆனந்த, தனலட்சுமி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து தனித்தனியே

வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்குச்சொத்துக்களை படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் காலை 9 மணியளவில் அரசு மருத்துவமனைக்கு சென்று சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த அறிக்கை இதுதான், அது அ.த.சா.ஆ.53 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் என்னுடன் வந்த சிறப்பு உதவி ஆய்வாளர் சண்முகநாதவடிவேல் மூலம் பிரேதத்தை பரிசோதனை செய்வதற்காக வேண்டுகோள் கடிதத்துடன் 11.30 மணிக்கு அனுப்பி வைத்தேன். அந்த வேண்டுகோள் கடிதம் ஏற்கனவே அ.த.சா.ஆ.45 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் அங்கிருந்த சாட்சிகள் ரமேஷ், சுகுணு, காளியம்மாள், மாரியாயி, மோகன்ராஜ் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு சம்பவயிடம் சென்று அங்கிருந்த சாட்சிகள் அரசகுமார், முருகானந்தம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே சிறப்பு உதவி ஆய்வாளர் சண்முகநாதவடிவேல் விசாரித்து பிரேத பரிசோதனைக்கு பின்னர் பிரேதத்திற்கு பின்னர் சேகரிக்கப்பட்ட உடைகளான கருப்பு நீல நிறத்தில் உள்ள டிராயர் ஒன்று, வெள்ளை நிற முண்டா பணியன், மஞ்சள் நிற முழுக்கை சட்டை ஆகியவற்றை படிவம் 95 மூலம் கைப்பற்றினேன். அந்த படிவம் 95 இதுதான், அது ஏற்கனவே அ.த.சா.ஆ.54 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. கருப்பு நீல நிறத்தில் உள்ள டிராயர் ஒன்று ஏற்கனவே சா.பொ.19 ஆகவும், வெள்ளை நிற முண்டா பணியன் சா.பொ.20 ஆகவும், மஞ்சள் நிற முழுக்கை சட்டை சா.பொ.18 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் கைப்பற்றிய பொருட்கள்

அனைத்தையும் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். 19.12.2020 ஆம் தேதியன்று இந்த வழக்கை மேல்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு எனக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் நொய்யலில் உள்ள செல்லாண்டியம்மன் கோவில் முன்பு எதிரிகள் கலையரசன், பிரசாத், பிரசாந்த் மற்றும் ஷேக்தாவூத் (தாய் வழக்கு எதிரிகள்) மற்றும் எதிரி கோகுல்நாத் ஆகியோர்களை காலை 6.30 மணிக்கு அங்கிருந்த சாட்சிகள் பூபதி மற்றும் அருண்குமார் ஆகியோர் முன்னிலையில் கைது செய்து எதிரிகளை தனியாக விசாரித்தபோது 1 ஆம் எதிரி கலையரசன், 7.30 மணிக்கு மேற்சொன்ன சாட்சிகள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார், அதனை நான் சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். 2 ஆம் எதிரி பிரசாத்க்கு 9.35 மணிக்கு முன்னிலையில் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார், ஒப்புதல் வாக்குமூலம் மேற்சொன்ன சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். 3 ஆம் எதிரி பிரசாந்த்க்கு 11 மணிக்கு ஒப்புதல் வாக்குமூலம் மேற்சொன்ன சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். பின்னர் 12.45 மணிக்கு 4 ஆம் எதிரி ஷேக்தாவூத் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 5 ஆம் எதிரி கோகுல்நாத் 2.30 மணிக்கு தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார், அதை சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். பின்னர் எதிரி கலையரசன் தன்னிடமிருந்து எடுத்து ஆஜர் செய்த இருசக்கர வாகனம் பதிவு எண்.TN–45–AT–5008 ஆஜர் செய்தார். மேலும், ரத்தக்கறை படிந்த வெள்ளை பாடார் கொண்ட கருப்பு வேட்டி எடுத்து ஆஜர் செய்தார். அதை நான் மகஜரில் கைப்பற்றினேன். அந்த மகஜர் ஏற்கனவே அ.த.சா.ஆ.28 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன இருசக்கர வாகனத்தின் புகைப்படம் அ.த.சா.ஆ.27 ஆகவும்,

மேற்சொன்ன கருப்புவேட்டி சா.பொ.11 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் எதிரி பிரசாத் தன்னிடமிருந்து எடுத்து ஆஜர் செய்த இருசக்கர வாகனம் பதிவு எண்.TN–47–AQ–8502 என்ற பதிவெண் கொண்ட கருப்பு நிற பஜாஜ் பிளாட்டின இருசக்கர வாகனத்தை மற்றும் நீலம் சிமெண்ட் கலர் கலந்த ஜீன்ஸ் கலர் பேண்ட் ஒன்றையும் அதே சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினேன். அந்த மகஜர் ஏற்கனவே அ.த.சா.ஆ.31 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன இருசக்கர வாகனத்தின் புகைப்படம் அ.த.சா.ஆ.30 ஆகவும், மேற்சொன்ன ஜீன்ஸ்பேண்ட் சா.பொ.12 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் 3 ஆம் எதிரி பிரசாந்த் தன்னிடமிருந்து எடுத்து ஆஜர் செய்த இருசக்கர வாகனம் பதிவு எண்.TN–48–J–1796 என்ற பதிவெண் கொண்ட கருப்பு நிற Hero Honda Splendor இருசக்கர வாகனத்திலை சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினேன். அந்த மகஜர் ஏற்கனவே அ.த.சா.ஆ.34 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன இருசக்கர வாகனத்தின் புகைப்படம் அ.த.சா.ஆ.33 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் 4 ஆம் எதிரி ஷேக்தாவூத் தன்னிடமிருந்து எடுத்து ஆஜர் செய்த பெரிய சூரி கத்தி ஒன்று மற்றும் நீல கலர் ஜீன்ஸ் பேண்ட் ஒன்றை அதே சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினேன். அந்த மகஜர் ஏற்கனவே அ.த.சா.ஆ.36 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சூரி கத்தி சா.பொ.14 ஆகவும், ஜீன்ஸ்பேண்ட் சா.பொ.13 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் 5 ஆம் எதிரி கோகுல்நாத் தன்னிடமிருந்து எடுத்து ஆஜர் செய்த கருப்பு வெள்ளை கலந்த ஜீன்ஸ்பேண்ட் அதே சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினேன். அந்த மகஜர் அ.த.சா.ஆ.38

ஆகவும், கருப்பு வெள்ளை கலந்த ஜீன்ஸ்பேண்ட் சா.பொ.15 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் இந்த வழக்கில் 1 ஆம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எங்களை மூர்த்திபாளையம், ஆத்தூர் பிரிவு ரோடு அருகில் உள்ள 7, கன்னிமார்கோவில் எதிரே உள்ள முட்புதரில் மறைத்து வைத்திருந்த வீச்சருவாள் மற்றும் வாள்கத்தி எடுத்து ஆஜர் செய்தார், அதனை நான் மேற்சொன்ன சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி ஒரு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் இதுதான், அது அ.த.சா.ஆ.40 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த வீச்சருவாள் சா.பொ.17 ஆகவும் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. வால்கத்தி சா.பொ.16 ஆகவும் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் அனைத்து எதிரிகளையும் உரிய காவலுடன் காவல் நிலையத்திற்கு கொண்டு சென்று தேகபரிசோதனை செய்து அவர்களை நீதிமன்ற காவலுக்கு அன்றைய தினமே அனுப்பி வைத்தேன். கைப்பற்றிய அனைத்து சொத்துக்களையும் படிவம்95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். 1 ஆம் எதிரி கலையரசன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே அ.த.சா.ஆ.29 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 2 ஆம் எதிரி பிரசாத் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே அ.த.சா.ஆ.32 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 3 ஆம் எதிரி பிரசாந்த் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே அ.த.சா.ஆ.35 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 4 ஆம் எதிரி ஷேக்தாவூத் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே அ.த.சா.ஆ.37 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 5 ஆம் எதிரி கோகுல்நாத்

கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே அ.த.சா.ஆ.39 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் இந்த வழக்கு 21.12.2020 ஆம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளர் சண்முகநாதவடிவேல் என்பவரை திருச்சி வட்டார தடய அறிவியல் ஆய்வாகத்திற்கு கடவுச்சீட்டு கொடுத்து பிரேத பரிசோதனையில் சேகரிக்கப்பட்ட உடல் உள்ளுருப்புகளை மற்றும் பிரேதத்தில் சேகரிக்கப்பட்ட உடைகளை ஆய்வு செய்ய அனுப்பி வைக்கப்பட்டது. அன்றைய தினமே எனக்கு கிடைத்த இரசிய தகவலின்படி இந்த வழக்கில் 6 ஆம் எதிரியான கிரிதரன் (எ) கிரி என்பவரை பகல் 1.30 மணிக்கு தோட்டக்குறிச்சி மலையப்பன் கோவில் அருகே வைத்து கைது செய்தேன். சாட்சிகள் செல்வராஜ் மற்றும் தங்கமணி ஆகியோர் முன்னிலையில் எதிரியை விசாரித்தபோது 1.45 மணிக்கு மேற்சொன்ன சாட்சிகள் முன்னிலையில் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். ஒப்புதல் வாக்குமூலம் மேற்சொன்ன சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். மேலும் மேற்சொன்ன எதிரி எங்களை B14 அண்ணா நகர் முதல் தெரு, வேலாயுதம்பாளையம், புகளூர் தாலுக்காவிற்கு அழைத்து சென்று அவர் வீட்டில் வைத்திருந்த TN-47-AQ-9423 என்ற பதிவெண் கொண்ட ஊதா நிறம் கொண்ட TVS Scoty Zest இருசக்கர வாகனத்தை சாட்சிகள் முன்னிலையில் எடுத்து ஆஜர் செய்தார், அதனை நான் மகஜரில் கைப்பற்றினேன். அந்த மகஜர் இதுதான், அது அ.த.சா.பொ.55 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்சொன்ன வாகனத்தின் புகைப்படம் இதுதான், அது அ.த.சா.ஆ.56 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றைய தினமே எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். மேற்சொன்ன எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கண்டுள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி

அ.த.சா.ஆ.57 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இந்த வழக்கில் சம்பவயிடத்திற்கு அருகில் உள்ள உள்ள 91 காபி காபே உரிமையாளர் திருமாவளவன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவயிடத்தில் கண்காணிப்பு கேமராவில் இருந்து பதிவு செய்த குழந்தைவேல் உதவியுடன் **CD-R** & **Pen Drive** மூலம் பதிவிறக்கம் செய்தேன். அந்த **Pen Drive** நீ.ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. **CD-R** நீ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. (மேற்சொன்ன **CD-R, Pen Drive** திரையிடப்பட்டு குறியீடு செய்யப்பட்டது.) மேற்சொன்ன சாட்சி குழந்தைவேல் கொரனுவில் இறந்துவிட்டார். குழந்தைவேல் கொடுத்த 65B இதுதான், அது அ.த.சா.ஆ.58 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் சம்பவயிடத்திற்கு அருகே உள்ள அட்சயபவன் ஓட்டலில் பணிபுரிந்து வந்த புரோட்டா மாஸ்டர் கணேசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த கடையில் இருந்த கண்காணிப்பு கேமரா மூலம் **CCTV camara** பதிவு செய்யப்பட்ட காட்சிகளை **DVR** ல் இருந்து பதிவிறக்கம் **Pen Drive** மற்றும் **CD-R** யிலும் மேற்சொன்ன குழந்தைவேல் பதிவிறக்கம் செய்து கொடுத்தார். அந்த **DVR** ல் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட மேற்சொன்ன குழந்தைவேல் பதிவிறக்கம் செய்து கொடுத்த **Pen Drive** மற்றும் **CD-R** யிலும் பதிவிறக்கம் செய்து கொடுத்தார். அந்த **Pen Drive** நீதிமன்ற நீ.ம.சா.ஆ.7 ஆகவும், **CD-R** நீ.ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. (மேற்சொன்ன **CD-R, Pen Drive** திரையிடப்பட்டு குறியீடு செய்யப்பட்டது.) குழந்தைவேல் கொடுத்த 65B இதுதான், அது அ.த.சா.ஆ.59 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் சம்பவயிடத்திற்கு அருகே உள்ள அட்சயபவன் ஓட்டலில் பணிபுரிந்து வந்த

புரோட்டா மாஸ்டர் கணேசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வெங்கமேட்டில் உள்ள A1 பெட்ரோல் பங்க் உரிமையாளர் பாலமுருகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த பெட்ரோல் பங்கில் இருந்த கண்காணிப்பு கேமரா மூலம் CCTV camara பதிவு செய்யப்பட்ட காட்சிகளை DVR ல் இருந்து பதிவிறக்கம் Pen Drive மற்றும் CD-R யிலும் மேற்சொன்ன குழந்தைவேல் பதிவிறக்கம் செய்து கொடுத்தார். அந்த DVR ல் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட மேற்சொன்ன குழந்தைவேல் பதிவிறக்கம் செய்து கொடுத்த Pen Drive மற்றும் CD-R யிலும் பதிவிறக்கம் செய்து கொடுத்தார். அந்த Pen Drive நீதிமன்ற நீ.ம.சா.ஆ.8 ஆகவும், CD-R நீ.ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. (மேற்சொன்ன CD-R, Pen Drive திரையிடப்பட்டு குறியீடு செய்யப்பட்டது.) குழந்தைவேல் கொடுத்த 65B இதுதான், அது அ.த.சா.ஆ.60 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பெட்ரோல் பங்க் உரிமையாளர் பாலமுருகனை விசாரித்து வாக்குமூலம் விசாரித்தேன். நீ.ம.சா.ஆ.8 என்ற போல்டரில் உள்ள A02_20201217165200.mp4 பிளே செய்ததில் சாட்சி அடையாளம் சொல்லவே 1.32 வினாடியில் Pause செய்யப்பட்டு அதில் நீல கலர் Hero Honda வாகனத்தில் வெள்ளைநிற முழுக்கை சட்டை மற்றும் ஜீன்ஸ் பேண்ட் போட்டுக்கொண்டு கூல்மணி (எ) மணிகண்டன் வண்டி ஓட்டிவர அவர் பின்னால் மற்றொரு எதிரியான பிரசாந்த் அமர்ந்து வந்து மேலும் மேற்சொன்ன விடியோவை பிளே செய்யப்பட்டு சாட்சி அடையாளம் சொல்லவே 1.38 வினாடியில் சாட்சி அடையாளம் சொல்லவே Pause செய்யப்பட்டது. மேற்சொன்ன பதிவினை பதிவு செய்து இருசக்கர வாகனத்தில் மஞ்சள் நிற அரைக்கை, அரைடவுசர் போட்டுக்கொண்டு இருசக்கரத்தை ஓட்டி வருபவர்

சீனிவாசன். அவருக்கு பின்னுர் அமர்ந்து வரக்கூடிய நபர் எதிரி சூர்யா (எ) உதயநிதி ஆவார். மேற்சொன்ன பதிவினை பிளே செய்து சாட்சி அடையாளம் காண்பிக்கவே சாட்சி அடையாளம் சொல்லவே 1.42 விஞடியில் **Pause** செய்யப்பட்டு அதில் இருசக்கர வாகனத்தில் வெள்ளைநிற சட்டையை, கருப்புநிற வெள்ளை பாடார் போட்டுக்கொண்டு இருசக்கர வாகனத்தை ஓட்டி வருபவர் கலையரசன். மேற்சொன்ன பதிவினை பிளே செய்து சாட்சி அடையாளம் காண்பிக்கவே சாட்சி அடையாளம் சொல்லவே 2.03 விஞடியில் **Pause** செய்யப்பட்டு பங்கிற்கு வெளியே மூவர் நின்று கொண்டிருக்கிறுார்கள். அதில் லுங்கி கட்டிக்கொண்டும், தொப்பி அணிந்து கொண்டும், முழுக்கை சட்டை அணிந்து கொண்டு இருப்பவர் கோகுல்நாத், மஞ்சள் நிற முக்கால் பேண்ட், வெள்ளை நிற டீ சர்ட் அணிந்திருக்கும் நபர் பிரசாத், ஜீன்ஸ் பேண்ட், முழுக்கை சட்டை அணிந்திருப்பவர் ஷேக்தாவூத் ஆவார். மேலும், மேற்சொன்ன பதிவினை பிளே செய்து சாட்சி அடையாளம் காண்பிக்கவே சாட்சி அடையாளம் சொல்லவே 4.04 விஞடியில் **Pause** செய்யப்பட்டு 8502 என்ற இருசக்கர வாகனத்தில் மூன்று நபர்கள் பயணிக்கிறுர்கள். அதில் முன்புறத்தில் இருப்பவர் பெயர் கலையரசன், நடுவில் இருப்பவர் பெயர் ஷேத்தாவூத், அதன் தொப்பி போட்டு பின்னுல் அமர்ந்திருப்பவர் கோகுல்நாத். மேலும், மேற்சொன்ன பதிவினை பிளே செய்து சாட்சி அடையாளம் காண்பிக்கவே சாட்சி அடையாளம் சொல்லவே 4.08 விஞடியில் **Pause** செய்யப்பட்டு 8502 என்ற இருசக்கர வாகனத்திற்கு பின்னுல் செல்லும் இரண்டு நபர்கள் பயணிக்கிறுர்கள். அதில் முன்புறத்தில் இருப்பவர் பெயர் கூல்மணி, அவர் பின்னுல் அமர்ந்திருப்பவர் பிரசாந்த். மேலும், மேற்சொன்ன

பதிவினை பிளே செய்து சாட்சி அடையாளம் காண்பிக்கவே சாட்சி அடையாளம் சொல்லவே 4.11 வினுடியில் **Pause** செய்யப்பட்டு 5008 என்ற இருசக்கர வாகனத்திற்கு ஓட்டி செல்லும் நபர் பெயர் சீனு (எ) சீனிவாசன், அவருக்கு பின்னுல் நடுவில் அமர்ந்திருப்பவர் பெயர் சூர்யா, அவருக்கு பின்னுல் அமர்ந்திருக்கும் நபரின் பெயர் பிரசாத். மேற்சொன்ன படத்தில் வரும் கூல்மணி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார், சாட்சி அவரை சரியாக அடையாளம் காண்பித்தார். உதயநிதி (எ) சூர்யா இன்று நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை (கு.வி.மு.ச.317 மனு தாக்கல் செய்யப்பட்டு நிபந்தனையின்பேரில் அனுமதிக்கப்பட்டது.) நீ.ம.சா.ஆ.8 என்ற போல்டரில் உள்ள A03_20201217165200.mp4 பிளே செய்ததில் சாட்சி அடையாளம் சொல்லவே 1.32 வினுடியில் **Pause** செய்யப்பட்டு அதில் நீல கலர் **Hero Honda** வாகனத்தில் வெள்ளைநிற முழுக்கை சட்டை மற்றும் ஜீன்ஸ் பேண்ட் போட்டுக்கொண்டு கூல்மணி (எ) மணிகண்டன் வண்டி ஓட்டிவர அவர் பின்னுல் மற்றொரு எதிரியான பிரசாந்த் அமர்ந்து வந்து மேலும் மேற்சொன்ன விடியோவை பிளே செய்யப்பட்டு சாட்சி அடையாளம் சொல்லவே 1.39 வினுடியில் சாட்சி அடையாளம் சொல்லவே **Pause** செய்யப்பட்டது. மேற்சொன்ன பதிவினை பதிவு செய்து இருசக்கர வாகனத்தில் மஞ்சள் நிற அரைக்கை, அரைடவுசர் போட்டுக்கொண்டு இருசக்கர வாகனத்தை ஓட்டி வருபவர் சீனிவாசன். அவருக்கு பின்னுர் அமர்ந்து வரக்கூடிய நபர் எதிரி சூர்யா (எ) உதயநிதி ஆவார். மேற்சொன்ன பதிவினை பிளே செய்து சாட்சி அடையாளம் காண்பிக்கவே சாட்சி அடையாளம் சொல்லவே 1.42 வினுடியில் **Pause** செய்யப்பட்டு அதில் இருசக்கர வாகனத்தில் வெள்ளைநிற சட்டையை,

கருப்புநிற வெள்ளை பாடார் போட்டுக்கொண்டு இருசக்கரத்தை ஓட்டி வருபவர் கலையரசன். மேற்சொன்ன பதிவினை பிளே செய்து சாட்சி அடையாளம் காண்பிக்கவே சாட்சி அடையாளம் சொல்லவே 2.50 வினாடியில் **Pause** செய்யப்பட்டு பங்கிற்கு உள்ளே நடந்துகொண்டு வருபவர்களில் அதில் லுங்கி கட்டிக்கொண்டும், தொப்பி அணிந்து கொண்டும், முழுக்கை சட்டை அணிந்து கொண்டு இருப்பவர் கோகுல்நாத், மஞ்சள் நிற முக்கால் பேண்ட், வெள்ளை நிற டீ சர்ட் அணிந்திருக்கும் நபர் பிரசாத், ஜீன்ஸ் பேண்ட், முழுக்கை சட்டை அணிந்திருப்பவர் ஷேக்தாவூத் ஆவார். மேலும், மேற்சொன்ன பதிவினை பிளே செய்து சாட்சி அடையாளம் காண்பிக்கவே சாட்சி அடையாளம் சொல்லவே 4.07 வினாடியில் **Pause** செய்யப்பட்டு இருசக்கர வாகனத்தில் மூன்று நபர்கள் பயணிக்கிறார்கள். அதில் முன்புறத்தில் இருப்பவர் பெயர் கலையரசன், நடுவில் இருப்பவர் பெயர் ஷேத்தாவூத், அதன் தொப்பி போட்டு பின்னால் அமர்ந்திருப்பவர் கோகுல்நாத். மேலும், மேற்சொன்ன பதிவினை பிளே செய்து சாட்சி அடையாளம் காண்பிக்கவே சாட்சி அடையாளம் சொல்லவே 4.08 வினாடியில் **Pause** செய்யப்பட்டு என்ற இருசக்கர வாகனத்திற்கு பின்னால் செல்லும் இரண்டு நபர்கள் பயணிக்கிறார்கள். அதில் முன்புறத்தில் இருப்பவர் பெயர் கூல்மணி, அவர் பின்னால் அமர்ந்திருப்பவர் பிரசாந்த். மேலும், மேற்சொன்ன பதிவினை பிளே செய்து சாட்சி அடையாளம் காண்பிக்கவே சாட்சி அடையாளம் சொல்லவே 4.11 வினாடியில் **Pause** செய்யப்பட்டு என்ற இருசக்கர வாகனத்திற்கு ஓட்டி செல்லும் நபர் பெயர் சீனு (எ) சீனிவாசன், அவருக்கு பின்னால் நடுவில் அமர்ந்திருப்பவர் பெயர் சூர்யா, அவருக்கு பின்னால் அமர்ந்திருக்கும் நபரின் பெயர் பிரசாத். நீ.ம.சா.ஆ.8 என்ற

போல்டரில் உள்ள A05_20201217165200.mp4 பிளே செய்ததில் சாட்சி அடையாளம் சொல்லவே 2.17 வினுடியில் Pause செய்யப்பட்டு அதில் இருசக்கர வாகனத்தில் மஞ்சள் நிற பனியன் போட்டுக்கொண்டு பெட்ரோல் நிரப்புவர் பெயர் சீனு (எ) சீனிவாசன். மேலும் மேற்சொன்ன விடியோவை பிளே செய்யப்பட்டு சாட்சி அடையாளம் சொல்லவே 2.50 வினுடியில் சாட்சி அடையாளம் சொல்லவே Pause செய்யப்பட்டது. மேற்சொன்ன பதிவினை பதிவு செய்து வெள்ளை நிற முழுக்கை சட்டை போட்டுக்கொண்டு பணம் கொடுக்கும் நபர் கூல்மணி. மேலும் மேற்சொன்ன விடியோவை பிளே செய்யப்பட்டு சாட்சி அடையாளம் சொல்லவே 3.09 வினுடியில் சாட்சி அடையாளம் சொல்லவே Pause செய்யப்பட்டு மொட்டை தலையில் கை வைத்திருக்கும் நபர் எதிரி சூர்யா மற்றும் பைக்கில் உட்கார்ந்து கொண்டிருக்கும் நபர் பிரசாந்த். மேலும் மேற்சொன்ன விடியோவை பிளே செய்யப்பட்டு சாட்சி அடையாளம் சொல்லவே 3.46 வினுடியில் சாட்சி அடையாளம் சொல்லவே Pause செய்யப்பட்டு வெள்ளை முழுக்கை சட்டை அணிந்துகொண்டு கூல்மணி பின்னால் அமர்ந்துகொண்டிருக்கும் நபர் பெயர் பிரசாந்த். அதற்கு பின்னால் இருசக்கர வாகனத்தில் கருப்புவேட்டி கட்டிக்கொண்டிருக்கும் நபர் பெயர் கலையரசன், அவருக்கு பின்னால் அமர்ந்திருக்கும் நபர் ஷேக்தாவூத். நீ.ம.சா.ஆ.8 A08_20201217165200.mp4 மேலும் மேற்சொன்ன விடியோவை பிளே செய்யப்பட்டு அதில் மேற்சொன்ன நபர்கள் மேற்சொன்ன காட்சிகளில் வரும் நபர்கள் பெட்ரோல் பங்கில் உள்ள இரண்டாவது வரிசையில் வரும் காட்சிகளாகும். நீ.ம.சா.ஆ.6 என்ற போல்டரில் உள்ள 3_05_R_17122020042304PM-2.avi பிளே செய்ததில் சாட்சி

அடையாளம் சொல்லவே 0.49 வினுடியில் Pause செய்யப்பட்டு அதில் மஞ்சள் சட்டை, அரை டவுசர் போட்டுக்கொண்டு முன்னுல் ஓடும் நபர் இறந்துபோன ரஞ்சித் ஆவார். அவர் பின்னுல் அவரின் காலரை பிடித்து செல்லும் நபர் கூல்மணி ஆவார். மேலும் மேற்சொன்ன விடியோவை பிளே செய்யப்பட்டு சாட்சி அடையாளம் சொல்லவே 0.50 வினுடியில் சாட்சி அடையாளம் சொல்லவே Pause செய்யப்பட்டது. மேற்சொன்ன பதிவினை பதிவு செய்து வெள்ளை நிற முழுக்கை சட்டை போட்டுக்கொண்டு பணம் கொடுக்கும் நபர் கூல்மணி. கூல்மணிக்கு பின்னுல் நீல கலர் டிரம் அருகில் நிற்பவர் சீனு, சீனுக்கு. பின்னுல் வரும் நபர் சூர்யா. மேலும் மேற்சொன்ன விடியோவை பிளே செய்யப்பட்டு சாட்சி அடையாளம் சொல்லவே 0.57–0.58 வினுடியில் பிளே செய்யப்பட்ட காட்சிகளில் மூன்று. நபர்கள் ரஞ்சித்குமாரை வெட்டுபவர்கள் கூல்மணி, சீனு, சூர்யா. மேலும், இறுதி காட்சி வரை வரும் காட்சிகள் மேற்சொன்ன மூன்று நபர்களும் ரஞ்சித்குமாரை வெட்டும் காட்சிகளாகும். மேற்சொன்ன படத்தில் வரும் கூல்மணி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார், சாட்சி அவரை சரியாக அடையாளம் காண்பித்தார். உதயநிதி (எ) சூர்யா இன்று நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை (கு.வி.மு.ச.317 மனு தாக்கல் செய்யப்பட்டு நிபந்தனையின்பேரில் அனுமதிக்கப்பட்டது.) மேற்சொன்ன கைப்பற்றிய CD–R களை மற்றும் Pen Drive களை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து பின்னர் நீதிமன்றம் மூலம் சென்னை தடய அறிவியல் ஆய்வகத்தில் உள்ள சைபர் செல் பிரிவிற்கு ஆய்விற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. முதல் நிலை காவலர் 1631 சதீஸ்குமார் மூலம் கடவுச்சீட்டு கொடுத்து மேற்சொன்ன ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டது. பின்னர் இந்த வழக்கில்

22.12.2020 ஆம் தேதி புலன் விசாரணை மேற்கொண்டு சாட்சிகள் பிரபு, முருகேசன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். 23.12.2020 ஆம் தேதியன்று சாட்சிகள் விஜய்ஆனந்த், தனலட்சுமி, பிரபு, முருகேசன், பிரகாஷ் ஆகியோர்களை மீண்டும் விசாரித்து மறுவாக்குமூலங்கள் பதிவு செய்தேன். அன்றைய தினமே எனக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி சுமார் 12.35 மணிக்கு இவ்வழக்கில் தொடர்புடைய எதிரி மணிகண்டன் மற்றும் சீனிவாசன் இருவரையும் வேலாயுதம்பாளையம் பைபாஸ் சேலம் பஸ் நிறுத்ததில் வைத்து கைது செய்து சாட்சிகள் விஜய்ஆனந்த் மற்றும் தனலட்சுமி ஆகியோர் முன்னிலையில் எதிரி கூல்மணி மற்றும் சீனிவாசன் ஆகியோரை முன்னிலையில் கைது செய்து மேற்சொன்ன இருவரையும் தனித்தனியே விசாரரித்தபோது அவர்கள் சாட்சிகள் முன்னிலையில் ஒரு வாக்குமூலம் கொடுத்தார். அதை நான் பதிவு செய்தேன். கூல்மணி எங்களை மூர்த்திபாளையம் மார்க்கெட் பிரிவு ரோடு அருகில் உள்ள ஏழு கன்னிமார் கோவில் அருகில் அழைத்து சென்று அங்கு மறைத்து வைத்திருந்த சூரிக்கத்தியை எடுத்து சாட்சிகள் முன்னிலையில் ஆஜர் செய்தார். ஆஜர் எதிரி மணிகண்டன் (எ) கூல்மணி எடுத்து ஆஜர் செய்த கத்தியை ஒரு கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.5 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி கூல்மணி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட கத்தி இதுதான், அது ஏற்கனவே அ.த.சா.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. கூல்மணி எடுத்து ஆஜர் செய்த கத்தி இதுதான், அ.த.சா.ஆ.9 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. கூல்மணி எடுத்து ஆஜர் செய்த கத்தி இதுதான், அது ஏற்கனவே சா.பொ.1 ஆக

குறியீடு செய்யப்பட்டுள்ளது. சீனிவாசன் மேற்சொன்ன சாட்சிகள் முன்னிலையில் கூல்மணி வாக்குமூலம் கொடுத்த பின்னுல் சீனிவாசன் வாக்குமூலம் கொடுத்தார். அதை நான்பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். கூல்மணி மற்றும் சீனிவாசனும் எங்களை மூர்த்திபாளையம் மார்க்கெட் பிரிவு ரோடு அருகில் உள்ள ஏழு கன்னிமார் கோவில் அருகில் அழைத்து சென்று அங்கு மறைத்து வைத்திருந்த சூரிக்கத்தியை எடுத்து சாட்சிகள் முன்னிலையில்ஆஜர் செய்தார். எதிரி சீனிவாசன் எடுத்து ஆஜர் செய்த கத்தியை ஒரு கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.9 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி கூல்மணி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி இதுதான், அது ஏற்கனவே அ.த.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சீனிவாசன் எடுத்து ஆஜர் செய்த கத்தி இதுதான், அது ஏற்கனவே சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன இரண்டு எதிரிகளையும் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். இன்று நீதிமன்றத்தில் ஆஜராக எதிரி சூர்யா (எ) உதயநிதி நீதிமன்ற காவலில் இருந்து காவல்துறை காவலில் Crl.MP.No.122/2021 என்ற மனுவில் உத்திரவு பெற்று 18.02.2021 அன்று காவலில் எடுத்து விஜய்ஆனந்த் மற்றும் தனலட்சுமி ஆகியோர் முன்னிலையில் விசாரித்தபோது சூர்யா (எ) உதயநிதி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதனை மேற்சொன்ன சாட்சிகள் முன்பு பதிவு செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். சூர்யா (எ) உதயநிதி மூர்த்திபாளையம், ஆத்தூர் பிரிவு ரோடு அருகே உள்ள ஏழு கன்னிமார்கோவில் எதிரே உள்ள முட்புதரில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து ஆஜர் செய்தார். அதனை சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி ஒரு கைப்பறுதல் மகஜர் தயார்

செய்தேன். எதிரி எடுத்த கத்தியை ஒரு கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் இதுதான். அது ஏற்கனவே அ.த.சா.ஆ.13 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி சூர்யா (எ) உதயநிதி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி இதுதான், அது ஏற்கனவே அ.த.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சீனிவாசன் எடுத்து ஆஜர் செய்த கத்தி இதுதான், அது ஏற்கனவே சா.பொ.3 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அன்றைய தினமே சூர்யா (எ) உதயநிதியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். அன்றையதினமே வழக்குச்சொத்துக்களை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். இறந்துபோன ரஞ்சித்குமார் பட்டியல் இன வகுப்பை சேர்ந்தவர் என்பவர் ஜாதி சான்றிதழ் பெற வட்டாட்சியடம் விண்ணப்பம் கொடுத்தேன். மேலும், இந்த வழக்கில் உள்ள எதிரிகளை ஜாதிசான்று பெற வட்டாட்சியரிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். வட்டாட்சியரிடம் கொடுத்து வட்டாட்சியரிடம் ஜாதி சான்றிதழை பெற்றேன். அதில் இறந்துபோன ரஞ்சித்குமார் பட்டியல் இனத்தை சார்ந்தவர் என்று சான்று சான்றிதழ் பெற்றேன். அந்த சான்றிதழ் இதுதான். அது அ.த.சா.ஆ.47 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி கலையரசன் பட்டியல் இனத்தை சாராதவர் என்று சான்று வழங்கினர். அந்த ஜாதிச சான்றிதழ் இதுதான், அது அ.த.சா.ஆ.61 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி பிரசாந்த் பட்டியல் இனத்தை சார்ந்தவர் என்று சான்று வழங்கினர். அந்த ஜாதி சான்றிதழ் இதுதான், அது அ.த.சா.ஆ.62 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி பிரசாத் பட்டியல் இனத்தை சாந்தவர் என்று சான்று வழங்கினர். அந்த ஜாதி சான்றிதழ் இதுதான், அது அ.த.சா.ஆ.63 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி

கோகுல்நாத் பட்டியல் இனத்தை சாராதவர் என்று சான்று வழங்கினர். அந்த ஜாதி சான்றிதழ் இதுதான், அது அ.த.சா.ஆ.64 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி ஷேத்தாவூத் பட்டியல் இனத்தை சாராதவர் என்று சான்று வழங்கினர். அந்த ஜாதி சான்றிதழ் இதுதான், அது அ.த.சா.ஆ.65 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி கிரி (எ) கிரிதர் பட்டியல் இனத்தை சாராதவர் என்று சான்று வழங்கினர். அந்த ஜாதி சான்றிதழ் இதுதான், அது அ.த.சா.ஆ.66 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இன்று ஆஜர் ஆகாத எதிரி பட்டியல் இனத்தை சாராதவர், ஆஜர் எதிரி கூல்மணி (எ) மணிகண்டன் பட்டியல் இனத்தை சாராதவர் என்று சான்று வழங்கினர். எதிரி சீனிவாசன் (எ) சீனு பட்டியல் இனத்தை சாராதவர் என்று சான்று வழங்கினர். அந்த ஜாதி சான்றிதழ் இதுதான், அது அ.த.சா.ஆ.67 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இறந்துபோனவர் பட்டியல் இனத்தை சார்ந்தவர் என்பதாலும், பல எதிரிகள் பட்டியல் இனத்தை சாராதவர்கள் என்பதாலும் நான் சட்டமாகுதல் அறிக்கை தயார் செய்த 12.03.2021 ஆம் தேதியன்று நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த சட்ட மாறுதல் அறிக்கை இதுதான், அது அ.த.சா.ஆ.68 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி இந்த வழக்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்திரவின்படி மாவட்ட துணை கண்காணிப்பளார் வசம் ஒப்படைத்தேன். மாவட்ட துணை கண்காணிப்பாளர் என்னை இது சம்மந்தமாக விசாரரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.01.12 20:02:17 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.